<u>முதன்மை உதவி அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை</u>

<u>முன்னிலை திருமதி. பி. சுதா, பி.காம்., பி.எல்.,</u>

<u>முதன்மை உதவி அமர்வு நீதிபதி.</u>

<u>S.C. No.24/2023</u>

அ.சா.7 தேதி. 06.11.2025

| | | | |
|---|---|---|---|
| பெயர் | Dr.R.விமல்நாதன் | த/பெ. | ரவி |
| வயது | 34 | தொழில் | அறுவை சிகிச்சை பிரிவில் உதவி பேராசிரியராக |
| கிராமம் | | தாலுக்கா | |

(எதிரிகள்ஆஜர்).

<u>சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை</u>

நான் தற்போது தஞ்சாவூர் மருத்துவ கல்அறுவை சிகிச்சை பிரிவில் உதவி பேராசிரியராக லூரி மருத்துவமனையில் நரம்பியல் அறுவை சிகிச்சை பிரிவில் உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். Dr.நித்தியாநந்தன், உதவி நரம்பியல் அறுவை சிகிச்சை நிபுணராக தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் பணிபுரிந்தபோது நான் அங்கு அதே பிரிவில் முதுநிலை பட்டப்படிப்பு படித்து பயிற்சியில் இருந்ததினால் எனக்கு மேற்படி டாக்டர். நித்தியாநந்தன் அவர்களை நன்கு தெரியும். அவருடைய கையொப்பமும் எனக்கு நன்கு தெரியும். அவர் தற்போது பணி நிமிர்த்த காரணமாக வெளிநாட்டிற்கு சென்றுள்ள காரணத்தினால் S.C. 24/2023 என்ற வழக்கில் அவருக்கு வந்த அழைப்பாணையை எங்கள் துறையில் பெற்று என்னை இந்த வழக்கிற்காக மேற்படி நித்தியாநந்தன் அவர்கள் கொடுத்த காயச்சான்றுதழ் குறித்தும் அதிலுள்ள காயத்தின் தன்மைகள் குறித்தும், அவரது கையொப்பம் எனக்கு நன்கு பரீச்சயம் என்பதாலும், நானும் அதே பிரிவைச்சேர்ந்த மருத்துவர் என்பதினாலும் சாட்சியம் அளிக்க எனக்கு பணிக்கப்பட்டதினால் நான் இன்று நீதிமன்றம் ஆஜராகி சாட்சியம் அளிக்கிறேன்.

நான் தற்போது ஆஜர் செய்வது எங்கள் துறையின் மேல் அதிகாரி கொடுத்த நியமனக்கடிதம் ஆகும். அந்த நியமனக்கடிதம் **அ.சா.ஆ.7** ஆகும். கடந்த 26.06.2021 ஆம் தேதியில் தஞ்சாவூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் Dr.நித்தியாநந்தம் உதவி நரம்பியல் அறுவை சிகிச்சை நிபுணர் அவர்கள் மருத்துவமனையில் பணியில் இருந்தபோது சுமார் இரவு 07.10 மணியளவில் மயிலாடுதுறை தாலுக்கா, மன்னம்பந்தல் முளப்பாக்கம் தெற்குத்தெருவைச் சேர்ந்த மணி என்கிற மணிவேலன் வயது 21 த/பெ. சந்திரசேகர் என்பவர் அவரது தலை, முன்பக்க நெற்றி, ஆகிய இடங்களில் அவர் இரத்த கிராய்ப்பு காயத்தோடு வந்தார். அவருக்கு வலது கை நடுவிரல், இடது கை மூட்டு, இடது மணிக்கட்டு ஆகிய இடங்களில் வலி இருப்பதாக கூறினார். அவர் வீட்டில் இருக்கும்போது 25.06.2021 அன்று மாலை 03.30 மணியளவில் அடையாளம் தெரியாத 5 நபர்களால் கட்டையால் தாக்கப்பட்டதாக தாமாகக்கூறினார்.

அவருக்கு ஏற்பட்ட தலையில் உள்ள பெரும்காயத்தினால் அவரை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளித்து 03.07.2021 ம் தேதி அன்று 02.00 மணிளவில் அவரை மருத்துவமனையிலிருந்து டிஸ்சார்ஜ் செய்து அனுப்பியுள்ளார். அவருக்கு மண்டையில் ஏற்பட்ட பலத்த காயத்தினால் CT Scan எடுப்பதற்காக பரிந்துரை செய்யப்பட்டு அதன் அடிப்படையில் அவருக்கு CT Scan எடுக்கப்பட்டது. அந்த விபத்துப்பதிவேடு **அ.சா.ஆ.8** ஆகும். CT Scanலில் அவருக்கு வலது புறம் Temparol verital எலும்பு முறிவு ஏற்பட்டு மற்றும் இரத்தக்கசிவு ஏற்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. மற்றும் இடது முன்மூளை பகுதியில் Contussion எனப்படும் இரத்தக்கட்டு ஏற்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளது. மேலும் இடது பக்கம் Frondo Temparol Verital. SubTural Temtomaஎன்ற இரத்தக்காயம் ஏற்பட்டிருந்ததாக குறிப்பிடப்பட்டு இருந்தது. இந்த காயத்தின் தன்மையின் அடிப்படையில் மணி என்பவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று சான்று அளித்துள்ளார். அந்த சான்று **அ.த.சா.ஆ.9** ஆகும்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

காயத்தின் தன்மை குறித்து முதலில் சிகிச்சை அளித்த மருத்துவர் தான் விபத்து பதிவேட்டில் குறிப்பிட முடியும் என்றால் சரிதான். செங்கல்லால் நெற்றி பகுதியில் தாக்கியிருந்தால் பெரிய அளவில் காயம் ஏற்பட்டிருக்கும் என்றால் சரிதான். மணிவேலன் என்பவருக்கு ஏற்பட்ட காயம் சிராய்ப்பு காயம் பெரிய அளவு காயம் எதுவும் இல்லை என்றால் சரிதான். மணிவேலனுக்கு கைகளில் வெளிப்புற காயங்கள் எதுவும் இல்லை என்றால் சரிதான்.

**மறுவிசாரணை இல்லை.**

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை அமர்வு நீதிபதி,
மயிலாடுதுறை.

முதன்மை உதவி அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை
முன்னிலை திருமதி. பி. சுதா, பி.காம்., பி.எல்.,
முதன்மை உதவி அமர்வு நீதிபதி.
S.C. No.24/2023

அ.சா.8 தேதி. 06.11.2025

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஆறுமுகம் | த/பெ. | முத்தையன் |
| வயது | 63 | தொழில் | |
| கிராமம் | சித்தர்காடு,. மயிலாடுதுறை. | தாலுக்கா | |

(எதிரிகள்ஆஜர்).

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை

நான் காவல்துறை காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வுப்பெற்று தற்போது சித்தர்காடு, மயிலாடுதுறை என்ற முகவரியில் வசித்து வருகிறேன். நான் 26.06.2021 அன்று மயிலாடுதுறை காவல் நிலையத்தில் நிலைய பொறுப்பில் இருந்தபோது தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையிலிருந்து கிடைத்த தகவலின் அடிப்படையில் தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு சென்ற அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த மணிவேலன் வயது 21 த/பெ. சந்திரசேகர், தெற்குத்தெரு, முளைப்பாக்கம், மன்னம்பந்தல், மயிலாடுதுறை என்ற முகவரியைச்சேர்ந்தவரை விசாரணை செய்ததில் அவருடைய தந்தை சந்திரசேகர் Catering படித்துவிட்டு வீட்டில் இருந்து வந்ததாகவும்,. அவரது அம்மா, அவரது சகோதரிகள் அனைவரும் திருப்பூரில் தங்கி ஒரு கம்பெனியில் வேலை செய்து வந்ததாகவும், சத்தியசீலன் என்பவரின் மகள் ரிஸ்வானா என்பவரை 2 வருடமாக காதலித்து வந்ததாகவும், அந்த ரிஸ்வானா என்பவரின் வீட்டிற்கு தவணை பணம் வாங்கி கொடுத்திருந்ததாகவும்,.

அந்த பணத்தை திருப்பி கேட்டபோது ரிஸ்வானாவின் சகோதரர் ரித்தீஷ் என்பவர்ன அவருடைய அம்மா ராஜலெட்சுமி ஆகியோர் பிரச்சனை ஏற்பட்டதாகவும், தான் ரிஸ்வானாவுடன் பேசுவரை அவரது அமமாவும் அவரது அண்ணனும் தன்னை கண்டித்ததாகவும்,. 25.06.2021 அன்று மாலை சுமார்

5.00 மணிளவில் நானும் ரிஸ்வானாவும் அவரது மாமா ராஜா வீட்டு வாசல் முன்பு நின்றுகொண்டு பேசிக்கொண்டிருந்தபோது அங்கு வந்த ரிஸ்வானியின் அண்ணன் ரித்தீஷ் குச்சிக்காரி மகனே, தேவடியா மகனே என்று திட்டி கீழே கிடந்த செங்கல்லை எடுத்து தன்னை ஓங்கி இதோடு ஒழிந்து போடா என்று சொல்லி தன் தலையின் பின் பக்கம் மற்றும் முன் பக்கம், நெற்றியிலும் அடித்து காயத்தை ஏற்படுத்தியதாகவும், தான் வலி தாங்க முடியாமல் கீழே விழுந்ததும் ரிஸ்வானாவின் அம்மா ராஜலெட்சுமி என்பவர் தன்னை குச்சிகாரி மகனே, தேவடியா மகனே எங்களை ஏண்டா தொந்தரவு செய்யிற என்ற சொல்லி அங்கு கிடந்த கட்டையால் நெஞ்சு மற்றும் வலது கையில் அடித்ததாகவும் தான் வலி தாங்க முடியாமல் கத்தவே அங்கு இருந்தவர்கள் ஓடி வருவதை பாரத்து ரித்தீஸ் மற்றும் ராஜலெட்சுமி அங்கிருந்து ஓடிவிட்டதாகவும், தெருக்காரர்கள் அங்கு வரவில்லை என்றால் தன்னை அடித்து கொலை செய்திருப்பார்கள் என்றும். பின்னர் காயம் அடைந்த என்னை 26.06.2021 ஆம் தேதி காலை மயிலாடுதுறையில் உள்ள அருண்பிரியா தனியார் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றும், பின்பு அங்கிருந்து கும்பகோணம் சுகம் மருத்துவமனைக்கு அழைததுச்சென்றும் அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக சென்று சேர்ந்து சிகிச்சை பெற்றுக்கொண்டு இருப்பதாகவும், இது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்குமாறு கொடுத்த வாக்குமூலத்தை பெற்று 27.06.2021 ஆம் தேதி காலை 04.00 மணிக்கு மயிலாடுதுறை காவல் நிலைய குற்ற எண் 1481/2021 சட்டப்பிரிவுகள் இதச பிரிவுகள் 294(b), 324, 307ன் படி வழக்கு பதிவுசெய்து முதல் தகவல் அறிக்கையை மேல்விசாரணைக்காக மயிலாடுதுறை காவல் நிலைய ஆய்வாளர் பார்வைக்கு வைத்தும் இது குறித்து தகவலும் சொன்னேன். இது சம்பந்தமாக 13.07.2021 அன்று மயிலாடுதுறை அனைத்து மகளிர் காவல் நிலைய பொறுப்பில் இருந்த மயிலாடுதுறை காவல் ஆய்வாளர் திருமதி. கோப்பெருந்தேவி என்பவர் என்னை விசாரிக்க நான் நடந்த விபரத்தை கூறினேன். அந்த முதல் தகவல் அறிக்கை **அ.த.சா.ஆ.10** ஆகும்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:–</u>**

அசா1 என்னிடம் கொடுத்த புகார் வாக்குமூலத்தில் 2ம் எதிரி தன்னை தலையில் தாக்கியதாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். சம்பவ சமயத்தில் சத்தம் கேட்டு கமல்ராஜ், மதியழகன் ஆகியோர் ஓடிவந்ததாக அசா1 என்னிடம் கூறவில்லை என்றால் சரிதான். 2ம் எதிரி இத்தோடு செத்துப்போடா என்று சொல்லி அடித்தார் என புகார் வாக்குமூலத்தில் கூறப்படவில்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை 2 நாட்களுக்கு பிறகுதான் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆய்வாளர் என்னை காவல் நிலையத்தில் வைத்து விசாரணை செய்தார். எதிரிகளை பழிவாங்கும் நோக்கத்தோடு அசா1 கொடுத்த பொய்யான புகாரின் அடிப்படையில் எதிரிகள் மீது வழக்கு பதிவுசெய்தேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன இடத்தில், சொன்ன நேரத்தில் அசா1டம் புகார் வாக்குமூலம் எதுவும் பெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை அமர்வு நீதிபதி,
மயிலாடுதுறை.